செய்தி வெளியீடு எண். 241 நாள்: 05.05.2018

**கிராம சுயாட்சி இயக்கத்தில் 38 மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்தவர்களுக்கு ரூ. 167.49 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகள் மற்றும் கடம்பத்தூர் மற்றும் கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 312 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள், ரூ. 12.60 இலட்சம் சுழல நிதி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்**

திருவள்ளூர் தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக கிராம சுயாட்சி இயக்கத்தில் 38 மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்தவர்களுக்கு ரூ. 167.49 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகள் மற்றும் கடம்பத்தூர் மற்றும் கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 312 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள், ரூ. 12.60 இலட்சம் சுழல நிதி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.05.2018) வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது

மறைந்த அண்ணல் டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் முதல் இன்று 05.05.2018 வரை இந்தியா முழுவதும் முதல் கட்டமாக சில ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம சுயாட்சி இயக்கம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தை தவிர்த்து மீதமுள்ள 13 ஊராட்சிகள் ஒன்றியங்களில் மொத்தம் 91 ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்திட்டத்தின் அரசு காப்பீடு திட்டங்கள், எரிவாயு திட்டம், தூய்மை பாரத இயக்கம், பெண் குழந்தை கல்வி, எல்ஈடி விளக்கு பயன்படுத்துதல், விவசாயம், சுகாதாரம், வாழ்வாதார இயக்கம், வேலைவாய்ப்பு திறன் பயிற்சி என பல்வேறு திட்டங்களை கிராமப்புற குடும்பங்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது.

91 ஊராட்சிகளில் மத்திய அரசின் 7 சிறப்பு திட்டங்களான பிரதம மந்திரி உஜ்ஜவாலா யோஜனா (எரிவாயு இணைப்பு), உஜாலா திட்டம் (இலவச மின் இணைப்பு), உஜாலா திட்டம் (எல்ஈடி விளக்கு), பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா (வங்கி கணக்கு), பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (காப்பீடு திட்டம்), பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (விபத்து காப்பீடு) மற்றும் மிஷன் இந்திர தனுஷ் (நோய் தடுப்பு) ஆகிய தன்னிறைவு திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. இன்று 91 ஊராட்சிகளைச் சேர்ந்த 38 மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு வங்கி கடன் இணைப்பாக ரூ. 169.49 இலட்சம் நிதியும், நகர்ப்புறங்களில் செயல்படும் 129 மகளிர் சுய உதவி குழுக்கள் ரூ.12.60 இலட்சம் நிதியும், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் தனியார் துறையின் மூலம் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு, அதில் தேர்வான 312 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பணி நியமன ஆணைகளையும், இந்தியன் வங்கியின் தொழில்முனைவோருக்கான பயிற்சி நிலையத்தில் 8 நபர்களுக்கு பயிற்சியுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் திருமதி.பா.கிருஷ்ணம்மாள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**